**கம்புருபிடிய பிரதேச சபை**
**மாத்தறை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள்சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மே 02 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மே 13 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 நவம்பர் 25 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கம்புருபிடிய பிரதேச சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மாபலான ரடலங்காவத்த காணியில் அமைத்துள்ள சுடலையின் பெறுமதி ரூபா 10,129,355 குறைத்து நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டது.

(ஆ) ரூபா 635,646 ஆன விடய செலவினம் காணி மற்றும் கட்டிடத்தின் கீழ் மூலதனமாக்கப்பட்டிருந்தது.

(இ) பிரதேச சபையை வழுவூட்டும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் முன்னைய ஆண்டிற்காக கிடைக்கப் பெற்றிருந்த ரூபா 3,000,000 ஆன பணம் மீளாய்வாண்டில் கிடைத்த மூலதன அன்பளிப்பின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டதனால் ஆண்டின் மூலதன வருமானம் சமமான அளவால் அதிகரித்துக் காட்டப்பட்டது.

(ஈ) மீளாய்வாண்டில் உள்ளூராட்சி மற்றும் மாகாண சபை மூலம் கிடைக்கப் பெற்றிருந்த கிரயம் ரூபா 8,682,856 ஆன 02 வண்டிகளின் பெறுமதி மூலதனமாக்கப்பட்டிருக்காததுடன் முன்னைய ஆண்டு கிடைக்கப்பெற்றிருந்த டிபர் வண்டியின் கிரயம் ரூபா 2,490,398 ஆல் கூட்டிக் கணக்கிடப்பட்டிருந்தது.

#### 1.3.2 தொங்கல் கணக்கு

கடந்த வருடங்களில் இருந்து நிதிக்கூற்றுக்களில் முன்கொண்டுவரப்படுகின்ற ரூபா 1,168,845 தொகையான தொங்கல் கணக்கில் மீதியை மீளாய்வாண்டின் போதும் தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

நிதிக்கூற்றுக்களின் உள்ளடங்கிய 07 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகள் மற்றும் அதற்குரிய பட்டோலையின் காட்டப்பட்ட மீதிகளின் இடையில் கூட்டுத்தொகை ரூபா 51,603,563 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டன.

### 1.3.4 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் கூட்டுத்தொகை ரூபா 39,782,816 ஆன நாநாவித கடன்படுனர் மீதியில் 03 ஆண்டுகளை விஞ்சிய கூட்டுத்தொகை ரூபா 20,363,959 ஆன 28 மீதிகள் உள்ளடங்கப்பட்டிருந்தன.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் கூட்டுத்தொகை ரூபா 38,581,007 ஆன கடன்கொடுத்தோர் மீதியில் 03 ஆண்டுகளை விஞ்சிய கூட்டுத்தொகை ரூபா 8,538,300 ஆன 33 மீதிகள் உள்ளடங்கப்பட்டிருந்தன.

(இ) மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 4,443,779 ஆன வைப்பு மீதியில் 03 ஆண்டுகளை விஞ்சிய கூட்டுத்தொகை ரூபா 2,353,241 ஆன 55 மீதிகள் உள்ளடங்கப்பட்டிருந்தன.

(ஈ) தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்காமல் நிதிகூற்றுக்களில் தொடர்ந்து முன்கொண்டுவரப்பட்டிருந்த பெற வேண்டிய முற்பணக் கணக்கில் உள்ள ரூபா 431,339 ஆன மீதி தீர்ப்பதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.5 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

கூட்டுமொத்தம் ரூபா 80,826,154 ஆன நிலையான சொத்துக்கள் தொடர்பான நாளாதுவரையாக மற்றும் முறையாக பேணப்பட்ட நிலையான சொத்து பதிவேடு மற்றும் வருடாந்த பண்டகக் கணிப்பீடு அறிக்கையும், கூட்டுமொத்தம் ரூபா 9,166,795 ஆன பெற வேண்டிய வருமானம் தொடர்பான பட்டோளையும், ரூபா 29,690,846 ஆன நாநாவித கடன்பட்டோர்(வேலை) மிதிகள், பெற வேண்டிய முற்பணம், கூட்டுமொத்தம் ரூபா 22,472,927 ஆன நாநாவித கடன்கொடுத்தோர் மிதிகள் மற்றும் கூட்டுமொத்தம் ரூபா 1,955,056 ஆன வைப்பு மீதிகள் தொடர்பான பட்டோளை மற்றும் துணை பதிவேடுகள், சமர்ப்பிக்கப்படாததனால் கணக்காய்வின் போது அவைகளை திருப்திகரமாக பரிசீலனை செய்வதற்கு இயலாமலிருந்தது.

### 1.3.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

கீழே குறிப்பிடப்பட்டுள்ள இணங்காமை சந்தர்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுக்கு தொடர்ப்பு | இணங்காமை |
| --- | --- |
| 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாகம்) விதி | |
| (i) விதி 33 | வீத வரி செலுத்துவதை புறக்கணித்த நபர்கள் தொடர்பான பட்டியல் மற்றும் சொத்து தடை செய்யும் உத்தரவு பட்டியல் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) விதி 193 | பாதீட்டு மற்றும் குறை நிரப்பு பாதீட்டுடன் செலவு விடயங்களில் உள்ளவாறான செலவு, மிகை மற்றும் பற்றாக் குறைகளுக்கான காரணங்களைக் காட்டும் கூற்றொன்று சமர்ப்பித்திருக்கவில்லை |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 7,129,576 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை குறைந்த வருமானம் ரூபா 3,221,528 ஆக இருந்தது. அதன் படி மீளாய்வாண்டின் நிதி விளைவில் ரூபா 10,351,104 ஆன வளர்ச்சி காணப்பட்டது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

(அ) முன்னைய ஆண்டுடன் மீளாய்வாண்டில் நிலைமை ஒப்பிடுகையில் செலவினத்தில் 21 சதவீதம் குறைவாக காட்டப்பட்ட போதிலும், மொத்த மீண்டுவரும் வருமானத்தால் 87 சதவீதம் மீண்டுவரும் செலவு நிலவியதனால் வருமானத்திற்கு ஒப்பாக செலவினம் உயர் தரத்தில் நிலவியது.

(ஆ) மீளாய்வாண்டு மற்றும் முன்னைய இரண்டு ஆண்டுக்குள் சபையின் மொத்த மீண்டுவரும் வருமானம், சுய சம்பாதிப்பு வருமானம் மற்றும் வருமான உதவி போன்ற மொத்த மீண்டுவரும் செலவு தொடர்பான சுருக்கமான விபரமொன்று கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

| வருடம் | மொத்த மீண்டுவரும் வருமானம் | வருமான உதவி | சுய சம்பாதிப்பு வருமானம் | மொத்த மீண்டுவரும் செலவு | சுய சம்பாதிப்பு வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவு |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 2015 | 56,021,890 | 29,743,730 | 26,278,160 | 48,892,314 | (22,614,154) |
| 2014 | 40,099,250 | 18,336,803 | 21,762,447 | 43,320,779 | (21,558,332) |
| 2013 | 35,491,166 | 10,889,390 | 24,601,726 | 29,074,220 | (4,472,444) |

இது தொடர்பாக கீழே குறிப்பிடப்பட்ட அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) மீளாய்வாண்டு மற்றும் முன்னைய இரண்டு ஆண்டுக்குள் சபையின் வருமான உதவியில் அதிகரிப்பு மற்றும் முன்னைய ஆண்டுக்கு ஒப்பாக மீளாய்வாண்டில் சுய சம்பாதிப்பு வருமானத்தில் அதிகரிப்பொன்று ஆனது.

(ii) ஒவ்வொரு வருடத்திலும் மீண்டுவரும் செலவு தொடர்ந்து அதிகரிக்கும் வேகத்தில் வளர்ச்சி அடைந்து இருந்த போதிலும், அந் நிலைமையை கட்டுப்படுத்திக்கொள்வது தொடர்பாக சபையின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(iii) சுய சம்பாதிப்பு வருமானத்தை விஞ்சிய மூன்று வருடங்களிலும் கனிசமான உயர் பெருமானங்களால் மீண்டுவரும் செலவு அதிகரித்து இருந்தது.

(iv) வருமான உதவி கிடைக்காவிடின் சபையின் சுய சம்பாதிப்பு வருமானத்தினால் எவ்விதத்திலும் மீண்டுவரும் செலவினத்தை மீள் நிரப்பிகொள்ளமுடியாத நிலைமை காட்டப்படுகிறது.

(v) மேல் குறிப்பிடப்பட்ட இலக்கம் (i) தொடக்கம் (iv) வரையான பந்திகளில் குறிப்பிடப்படும் விடயங்களின் பிரகாரம் வருமான நிலைமையை உயர்த்துவதற்கு சபையின் கவனம் செலுத்தப்பட வேண்டி உள்ளது எனவும், அதற்காக முறையான வேலைதிட்டமொன்று தயாரிக்கப்பட்டு நடைமுறைபடுத்தப்பட வேண்டியும், அவ்வாறு செய்யப்படாத போது சபையின் நிலவும் பலவீனமான நிதி முகாமை காரணமாக சிக்கலான நிலைமை உருவாக

கூடும் எனவும் அதன் ஊடாக நிலைத்திருப்பது தொடர்பில் பாதகமான தாக்கத்தை ஏற்படுத்த கூடும் எனவும், கணக்காய்வின் கருத்தாகும்.

## 2.3 வருமானம் நிருவாகம்

### 2.3.1 வீத வரி

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) வீத வரி

மீளாய்வாண்டின் ஆரம்ப நிலுவை மீதி மற்றும் பற்றுச்சீட்டிடலோடு அறவிடப்படவேண்டிய கூட்டுத்தொகை ரூபா 1,139,895 ஆனதுடன், ஆண்டின் போது நிலுவை மீதிகளின் 19 சதவீதமும் பற்றுச்சீட்டிடலின் 54 சதவீதமும் மாத்திரம் அறவிடப்பட்டிருந்துது. வீத வரி அறவிடல் தொடர்பாக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 158(1)(அ) பந்தியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஏக்கர் வரி

மீளாய்வாண்டின் ஆரம்ப நிலுவை மீதி மற்றும் ஆண்டிற்கான பற்றுச்சீட்டிடலோடு ரூபா 305,927 அறவிடபடவேண்டிய போதிலும், ஆண்டினுள் நிலுவை மீதிகளின் 0.2 சதவீதமும் பற்றுச்சீட்டிடலின் 2 சதவீதமும் மாத்திரம் அறவிடப்பட்டிருந்தன. ஏக்கர் வரி அறவிடல் தொடர்பாக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 158(1)(அ) பந்தியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3.2 வாடகை

கூட்டுத்தொகை ரூபா 1,202,383 ஆன ஆரம்ப நிலுவை மீதியின் 29 சதவீதம் மாத்திரம் அறவிடப்பட்டிருந்த போதிலும், நிலுவை பணம் அறவிடல் தொடர்பாக பொதியளவு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3.3 அனுமதிப் பத்திரக் கட்டணம்

மீளாய்வாண்டு ஆரம்பத்தில் உள்ள ரூபா 81,895 ஆன நிலுவையான அனுமதிப் பத்திரக் கட்டண மீதியின் 03 சதவீதம் மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. 417 கடைஅறைகள் தொடர்பாக ரூபா 1,340,223 ஆன நிலுவை வாடகை அறவிடப்படவேண்டிய போதிலும், வாடகை ஒப்பந்தம் புதுப்பித்தலுக்கு அல்லது நிலுவை பணம் அறவிடலுக்கு போதியளவு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3.4 நீர் கட்டணம்

சபையினால் ஆண்டினுள் 06 கருத்திட்டங்களின் பராமரித்தல் தொடர்பாக ரூபா 4,507,725 செலவு செய்து இருந்த போதிலும், ஆரம்பத்தில் நிலுவை மீதிகளின் ஆண்டினுள் ரூபா 1,700,828 மற்றும் பற்றுச்சீட்டிடலின் ரூபா 3,321,054 மாத்திரம் அறவிடப்பட்டிருந்ததனால் நீர் கட்டணம் அறவிடலுக்கு போதியளவு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3.5 நீதி மன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2015 திசெம்பர் 31 திகதியில் முத்திரைக் கட்டணமாக ரூபா 8,087,730 வும் நீதி மன்றத் தண்டப் பணமாக ரூபா 695,040 வும் பெறவேண்டியதாக இருந்தது.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல் மதிப்பீடு

**மூலதன வேலை முன்மொழிவு நடைமுறைபடுத்தலின் முன்னேற்றம்**

மீளாய்வாண்டின் பாதீட்டு செய்யப்பட்ட மூலதன செலவு ரூபா 88,060,802 ஆன போதும் உள்ளவாறான மூலதன செலவு ரூபா 15,636,688 ஆனமையால் ரூபா 72,424,114 ஆன சேமிப்பு நிலவியது. அப்பெறுமதி மதிப்பீட்டு ஒதுக்கத்தின் 83 சதவீதமாகும். இதன் பிரகாரம் அபிவிருத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்ட ஒதுக்கம் அதன் நோக்கத்திற்காக ஈடுபடுத்தி கொள்ளும் பின்னடையும் நிலைமை காட்டப்பட்டது.

### 3.2 முகாமைத்துவத் திறமையின்மை

**மனித வள முகாமைத்துவம்**

ஆளனி திட்டத்தின் அங்கீகரிக்கப்பட்ட என்னிக்ககையை விஞ்சி 38 நபர்கள் சேவையில் ஈடுப்படுத்தப்பட்டு சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் செலுத்தப்பட்டிருந்த போதிலும், அப் பதவினை முறையாக்கிக்கொள்ளவும் அங்கீகரிக்கப்பட்ட பதவியில் காணப்பட்ட 05 வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டில் 02 வருமான விடயங்களின் அடையப்பெறாத எதிர்பார்க்கப்பட்ட வருமானம் ரூபா 706,912 வும், முறையான அனுமதியின்றி ஒர் செலவின விடயத்தின் அங்கீகரிக்கப்பட்ட எல்லை விஞ்சிய ரூபா 9,584,720 ஆன செலவும், 07 செலவின விடயங்களின் ரூபா 25,892,891 ஆன சேமிப்பும், நிலவியதனால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

இலங்கை குடியரசின் நிதிப்பிரமானங்கள் 133 மற்றும் 134 ல் குறிப்பிடப்பட்டுள்ள சட்ட ஏற்பாடுகள் மற்றும் தெற்கு உள்ளூராட்சி ஆணையாளரின் 2014 பெப்ரவரி 24 ஆம் திகதிய இலக்க தபபா/யஹ/01/ந.ச.லே கொண்ட் சுற்றிக்கை பிரகாம் போதியளவு உள்ளகக் கணக்காய்வு ஒன்று செய்யபட்டிருக்கவில்லை.

### 4.3 கணக்காய்வு மற்றும் முகாமை குழு

2009 யூன் 09 திகதிய இலக்க DMA/2009(i) கொண்ட முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கையின் ஏற்பாடுகள் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு நிருவப்படுவதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

**(அ) பயன்படுத்தப்படாத குறைப்பயன்பாட்டிற்குட்பட்ட சொத்துக்கள்**

---

(i) சபைக்கு சொந்தமான 04 வாகனங்கள் ஆண்டினுள் செலுத்துவதற்கு பயன்படுத்தப்படாதிருந்ததுடன், அழுத்த உருலையை 30 கிலோமீடர்கள் மட்டும் செலுத்துவதற்கு பயன்படுத்தப்பட்ட அவ் வாகனங்கள் பயன்பாட்டின்றி காணப்பட்டன.

(ii) கம்புருபிட்டிய ரடலங்கா வத்த காணியில் ரூபா 13,139,552 செலவில் 2015 ஆண்டில் நிர்மானித்து முடிக்கப்பட்டிருந்த சுடலையை 2016 ஜூலை மாதம் வரையிலும் திரக்கப்படாததனால் எதிர்பார்க்கப்பட்ட நோக்கம் நிறைவேரி இருக்கவில்லை.

(iii) பாவனைக்கி உதவாத நிலையிலுள்ள சபைக்கி சொந்தமான 05 வாகனங்கள் தொடர்பாக 2015 ஜூலை 10 திகதிய இலக்கம் 2/2015 கொண்ட பொது நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) சுவீகரிக்கப்படாத சொத்துக்கள்**

---

முன்னைய ஆண்டு மற்றும் மீளாய்வாண்டின் உள்ளுராட்சி அமைச்சினால் கிடைத்த இரட்டை கப் வண்டி, நீர் தாங்கியுடனான ட்ரக் வண்டி, டிபர் வண்டி மற்றும் அழுத்த உருளை என்பவற்றின் உரிமையை சபைக்கு சுவீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

---

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு.
(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு.
(இ) வருமான நிருவாகம்.
(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்.